டென்மார்க் தமிழர் பேரவை
**Dansk Tamilsk Forum**
**Denmark Tamils Forum**

www.dansktamilskforum.dk
forum@dansktamilskforum.dk

CVR.: 44669293

21.07.2024

கார்த்திக் மனோகரன் அவர்களுக்கு

உங்களது இரண்டு முகனூல்களில் எமது அமைப்பு தொடர்பாக ஒரு பதிவை நீங்கள் 18 சூலை 2024 அன்று பதிந்துள்ளதை பல டென்மார்க் வாழும் தமிழ்மக்கள் எமது நிர்வாக உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

டென்மாரக் தமிழர் பேரவை நீங்கள் குறிப்பிடும் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை மற்றும் எமது அமைப்பு தமிழீழ தேசியத்தலைவரதோ , தேசப்புதல்வி மருத்துவர் துவாரகா பிரபாகரனினதோ இருப்பை மறுதலிக்கும் எந்த நிகழ்வையும் ஆதரிக்கவில்லை. அத்துடன் உங்களால் நடாத்தப்பட்ட தேசியத்தலைவரின் இருப்பை மறுதலிக்கும் நிகழ்வை கண்டித்து 15 மே 2024 அன்று எமது அரசியல்குழு விரிவான கண்டன அறிக்கையையும் வெளியிட்டிருந்தது.

டென்மார்க் தமிழர் பேரவை தனது கண்டனத்தை உங்கள் நிகழ்வு நடைபெற்ற மண்டப உரிமையாளருக்கும் டென்மார்க் தமிழர் பேரவையின் வழக்கறிஞர் ஊடாக தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே எமது அமைப்பினர் தேசியத்தவைரின் இருப்பை மறுதலித்து சிறிலங்கா அரசிற்கு ஆதரவாக நடைபெற்ற நிகழ்வில் உணவு வழங்கியதாக நீங்கள் உங்கள் முகனூலில் பதிவிட்டிருப்பது கணடிக்கதக்கது.

உங்கள் பதிவானது எமது அமைப்பின் நற்பெயரையும் எமது தமிழீழ மக்களுக்கான அரசியல் செயல்பாடுகளையும் களங்கப்படுத்துகின்றது.

எமது அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களோ அல்லது சிறிலங்கா அரச ஆதரவாளர்களோ எமது அமைப்பின் பெயரை பாவித்திருந்தால் அதை நீங்கள் உறுதிப்படுத்தியிருக்கவேண்டும். உங்கள் நிகழ்விற்கு முன்பே எமது அரசியல்குழு நிகழ்வை கண்டித்து அறிக்கவைிட்டிருந்தது.

எமது அறிக்கைகள் எமது அதிகாரபூர்வ மின்னஞ்சல் ஊடாகவே அனுப்பபடும் அத்துடன் எமது இணையத்தளத்திலும் பதிவேற்றப்படும். (தற்போது தொழில்நுட்பவேலை காரணமாக வேலைசெய்யாது)

ஆகவே உங்கள் முகனூல்களின் பதிவில் இருந்து எமது அமைப்பின் பெயர் உடனடியாக ( ஒரு வாரத்திற்குள் ) நீக்கப்டுவதுடன் பதிவிற்கு மறுப்பறிக்கை வருத்தத்துடன் உங்கள் முகனூலிலேயே பதிவேற்றவேண்டும்.

உங்களின் பதில் ஒரு வாரத்தில் கிடைக்காத சந்தர்ப்பத்தில் டென்மார்க் தமிழர் பேரவையின் வழக்கறிஞரை மேற்படிவிடயம் தொடர்பாக நிர்வாகம் தொடர்புகொள்ளும்.

இக்கடிதத்தின் பிரதி டென்மார்க் தமிழர் பேரவையின் நிர்வாஉறுப்பினர்களுக்கும் செயல்பாட்டுகுழுக்களின் உறுப்பினர்களுக்கும் அனுப்பபடுவதுடன் ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றது. இதன் டெனிஸ் மொழிபெயப்பு எமது வழக்கறிஞருக்கு அனுப்பபடும்.

இவண்

த.பஞ்சராசா (தொ.பே : 27913671)

செயளாலர்

டென்மார்க் தமிழர் பேரவை

க20240721மு2